தமிழர் நேசன்

(தமிழர் கல்விச் சங்கத்துப் பத்திரிகை)

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு — திருக்குறள்

தொகுதி V. { துன்மதி௵ ஆவணிமீ } பகுதி 5.

மஞ்சள் சுரம்

Yellow Fever

லண்டன் மா நகரில் பிரசுரமாகும் டைம்ஸ் பத்திரிகையின்
விசேஷ வைத்திய சாஸ்திர நிருபரின் வியாசத்தினின்றும்
ஸ்ரீமான் P. N. அப்புஸ்வாமி ஐயர், B.A., B.L.
தொகுத்தெழுதியது.

மனித உயிரைச் சூறையாடும் கொடிய கொள்ளை நோய்களுள் இஃது ஒன்றாகும். இதைப் பற்றிய விருத்தாந்தம் வருமாறு:

1881-ம் வருஷத்தில் ஹவானாவிலிருந்த சார்லெஸ் பின்லே (Charles Finlay) என்பவர் கொசுவினால் இந்நோய் பரப்பப்பட்டு வருகிறதென்று கூறினார். அதற்கடுத்த வருஷம் டாக்டர் கிரார்டு (Dr. Gerard) என்பவர் இக்கொள்கையின் உண்மையை அறிய விரும்பி மிகவும் தைரியமாக இச்சுரம் கண்ட ஒருவனது இரத்தத்தை — சுரம் கண்ட நாலாவது நாளன்று — ஒரு கொசுவைக் குடிக்கச்செய்து

உடனே அக்கொசுவைத் தன்னைக் கடிக்கவிட்டுக் கொண்டார். கிரமமாக இவருக்கும் அந்தச் சுரம் கண்டது. தெய்வ கிருபையாக இலேசாகப் போயிற்று. உண்மை தெளிந்தது.

பிறகு, இன்ன வகைக் கொசு தான் இந் நோயைப் பரவச் செய்கிறதென்பதை அறிய முயன்று, அம் முயற்சியில் தமது உயிரைத் திருணமாக நினைத்துப் பாடுபட்ட பெரியோர் பலர். இன்ன வகைக் கொசுத்தான் நோயைப் பரவச் செய்கிறதென்று அறிந்தபின் அல்லவோ அவ் வகைக் கொசுவை வேரோடு தொலைத்து நோய் பரவாது தடுக்க முடியும். பொதுவாக இவ்வகைத் தொற்று நோய்கள் ஒவ்வொன்றையும் பரவச் செய்யும் ஜந்து பிரத்தியேகமாக இருக்கிறது; அதைத் தவிர வேறொரு ஜந்துவும் அதை ஏற்றுப் பரவச் செய்வதில்லை என்பது இயற்கை விந்தைகளுள் ஒன்று. குறிப்பிட்ட அவ் வகைக் கொசுவோ, நத்தையோ, பேனோ இல்லாவிடில் அந் நோய் பரவாது. அந்த மட்டிலும் நமக்கு அனுகூலம் தான்.

ஸ்டேகோமியா பேஷியேடா (Stagomyia Fasciata) என்னும் ஒரு வகைக் கொசுத்தான் இந் நோயின் செவிலித் தாயா யிருக்கக் கூடுமென்று எண்ணிய சிலர் அவ் வெண்ணம் சரியானதா அல்லவா என்பதை ஆராயத் தொடங்கினர். இவர்களுள் ரீட் (Reed), கார்ரோல் (Corroll) ஆக்ரமாண்ட் (Agramonte) லெஸியர் (Lezear) என்னும் தீரர் தமது உயிரைக் கூடப் பெரிதாகப் பாராட்டாது எங்ஙனமாயினும் இதன் உண்மை தெரிந்தால் போதுமென்று பாடுபட்டனர். மனித வருக்கத்துக்குப் பயன்படக்கூடிய அறிவு கிட்டுமாயின் தமது உயிரைக் கொடுத்தாயினும் அதை அடைய முயலுவது பரோபகார சிந்தையுடைய சான்றோரின் ஒழுக்கு. கொசுப்

புக முடியாத கட்டிடம் ஒன்றைக் கட்டி, அதனை இரண்டு அறைகளாகத் தடுத்தனர். ஒன்றில் இச் சுரம் கண்டவர்களைக் கடித்த கொசுக்கள் விடப்பட்டன; மற்றொன்றில் கொசுக்கள் இல்லை.

கொசுவிருந்த அறையில் இவர்கள் முறைவைத்துப் படுத்துவந்தனர். இவ்வாறு செய்ய எவ்வளவு தைரியம் வேண்டுமென்பதை எடுத்துக் கூறவேண்டியது அனாவசியமெனினும், இந் நோயின் கொடுமையைப் பற்றிச் சிறிதேனும் தெரிந்தவர்க்கே இச் செயலின் வீரத் தன்மை நன்கு விளங்கும். அந்நாளில் இச் சுரம்கண்டவர்களுள் நூற்றிலொருவர் பிழைப்பது அரிதாயிருந்தது என்றால் இவரது தீரம் சிறிது புலப்படும். கொடிய அரவம் வாழும் பாம்புப் புற்றில் கையிடுவதையே இதற்கு ஒப்பிடலாம். எனினும் மேற்கூறிய தீரர் சிறிதும் திகைத்துப் பின்வாங்கவில்லை. இவ்வாறு அவர் ஒவ்வொருவராகச் சென்று தூங்கி வரும் நாளில் லேசியருக்குச் சுரம் கண்டது.

ஆகவே மேற்கூறியவகைக் கொசுத்தான் இந் நோயைப் பரவச்செய்கின்றது என்பதற்கு ருசு ஏற்பட்டது. இவ்வளவு கஷ்டப்பட்டுக் கிடைத்த அறிவைப் பயன்படுத்த வேண்டிய ஏற்பாடுகள் உடனே செய்யப்பட்டன. சமீபத்தில் காலம் சென்ற ஜெனரல் கார்காஸ் (General Gorgos) என்பவர் பனமா வாய்க்கால் பிரதேச முழுமையினின்றும் இக் கொசுவினத்தை வேரோடு தொலைக்க வேண்டிய முயற்சிகளனைத்தையும் செய்தனர். அவர் எடுத்துக் கொண்ட சிரமத்தினால் யமபடர் நிறைந்த பனமா பிரதேசமானது "நியூயார்க் நகரத்தைப் போலவே' மிகவும் சுகாதாரமான இடமாக மாறிவிட்டதாம். சற்றேறக்குறைய ஒன்றரை நூற்றாண்டுகளாக இப் படுநோய்க்குட்பட்டு ஆயிரக்கணக

கள்ச் மணித் உயிரைப் பலி கொடுத்துவந்த ஹாவனவில் "இங்கு இவ்வகைக் கொசுவின் ஒரு குஞ்சு கூடக் கிடை யாது" என்று புகழ்ந்து சொல்லும்படி மூன்று மாதம் கொசு வேட்டையாடிக் கொசுக்களைத் தொலைத்தனர்.

பிறகு, இவ்வகைக் கொசுக்கள் தமது உடலில் ஏற்றுப் பரவிவரும் விஷம் என்ன, அஃது எத்தன்மையது என்னும் விஷயங்களை அறிவாளர் ஆராயத்தொடங்கினர். விஷம் இன்ன தென்றும், அதன் குணம் இன்னதென்றும் அறிந்த பின் னரல்லவோ அதை நீக்கக் கூடிய மருந்துகளையும் வைத்திய முறைகளையும் ஆராயக்கூடும். அமெரிக்காக் கண்டத்தில் பாக்டீரியாவைப் பற்றிய ஆராய்ச்சி செய்துவருபவரில் கியாதி பெற்ற ஒருவராகிய நோகூசி (Noguchi) என்பவர் கேயக் கில்லுக்குச் சென்று அங்கே தொடர்பான சில சோதனை களை நடத்திவந்தனர். அவற்றின் பயனாக நோய்வித்தாகும் ஒரு சிற்றுயிரைக் (Organism) கண்டு பிடித்தார். நுண்மை நோக்கியின் வழியாகப் பார்க்கும்போது அது மெல்லிய சிறு கயிற்றைப் போல் தோன்றிற்று. அது சுருசுருப் பாக அசைந்து இடம் பெயருவது நன்றாகத் தெரிந்தது. அவ் வித்துயிர் (Germ) தான் இந்நோயை விளைவிக்கின்ற தென்றும், அதைத் தான் கொசுவானது நோயாளியிடமிருந்து பெற்று வேறொரு உடலில் செலுத்தி நோயைப் பரவச் செய்கிற தென்றும் அவர் கூறினர்.

இதை முதலில் பிற அறிவாளர் ஒப்புக் கொள்ள வில்லை. ஆனால் வரவர நமக்குக் கிடைத்து வரும் ருசுக்களி லிருந்து இதன் உண்மை அநேகமாக நிரூபிக்கப் பட்ட தென்றே சொல்லவேண்டும்.

அவர் செய்ததென்ன வெனில், சுரம் கண்ட ஒருவனது உடலிலிருந்து கொஞ்சம் இரத்தத்தை எடுத்து அதை ஒரு கினிப்பன்றியினுள் செலுத்தினர். வெகு சீக்கிரம் அதற்கு இந்நோய் கண்டது. அதன் இரத்தத்தில் மேற்கூறிய வித்துயிர் காணப்பட்டது. பிறகு அப்பன்றியின் இரத்தத்திலுள்ள வித்துயிர்களை எடுத்து அவற்றுக்கு வேண்டிய சௌகரியமான சூடு காற்று முதலியவற்றை அமைத்துச் சிற்சில திராவகங்களில் அவற்றை வளரச் செய்தனர். இவ்வகையாய் வளர்ந்து பெருகிய வித்துயிர்களை மறுபடியும் வேறு சில கினிப்பன்றிகளுள் செலுத்த அவற்றுக்கும் இந்நோய் கண்டு அவை மாண்டன. மேற்கூறிய வித்துயிர் கினிப்பன்றியின் உடலில் நிறையக் காணப்படினும், நோய் கண்ட மனிதனது உடலில் இது குறைவாகவே இருப்பதால் இதைக் காணுவது மிகவும் கஷ்ட சாத்தியமாயிருக்கிறது. நோயுற்ற ஒரு கினிப்பன்றியிலிருந்து நோயற்ற தொன்றினுள் சென்று அதையும் நோயுறச் செய்வதால் இதுதான் நோய் வித்தென்பதற்கு ஐயமில்லை. மேலும் நோயுற்ற கினிப்பன்றியினின்று நோயுறாத பன்றிக்குக் கொசுவின் வழியாகவும் சென்று நோய் விளைப்பதையும் அவர் சோதித்து அறிந்திருக்கிறார். அவர் செய்த ஒவ்வொரு பிரயத்தனத்திலும் நோய் உண்டாகவில்லை என்பது மேற்கூறியவற்றின் உண்மையைச் சிறிதும் சந்தேகத்துள்ளாக்காது. ஏனெனில் கொசுக்களில் ஒரு சிறு பான்மையே நோய்வித்துக்களை ஏற்றுக் கொள்கின்றன. அதனால் நோயுற்ற ஒருவனைக் கடித்த கொசுவானது அவசியமாகத் தீங்குசெய்யக் கூடியதாகி விடுகிற தென்பதில்லை. நோய் வித்தை ஏற்றுக் கொண்ட கொசுக்களே நோய் விளைவிக்க வல்லன. ஆதலால் தான் ஒவ்வொரு தடவையும் நோய் காணுவதில்லை.

இதற்கு அடுத்தபடி என்னவெனில் நோயை அகற்றுதற்கு உரிய மருந்துகளைத் தேடுதலும், சரியான சிகிச்சை முறைகளை இன்ன வென்று அறிந்து கொள்ளுவதுமே. நோய்வித்து இன்னவென்று அறியப்பட்டதால் மருந்தை கண்டு பிடிக்கும் முயற்சி சற்று எளிதாகிறது.

நொகூசி ஒரு வகை ஸீரம் (Serum) தயார் செய்திருக்கிறார். நோயுற்ற ஒரு கினீப்பன்றிக்குள் அது நோயுற்ற —அதாவது நேராக நோய்வித்தைச் செலுத்தியபின்னே அல்லது கொசுக்கடித்த பின்னே— நாலு நாளுக்குள் இம் மருந்தைச் சிறிது சிறிது மூன்று வேளை செலுத்திவிட்டால் நோயின் போக்குத் தடைபட்டு நோய் நீங்கி விடுகிறது. நோய் கண்டு சுரம் சிறிது காலம் அடித்த பின் இம் மருந்தைக் கொடுத்துப்பார்த்ததில் நோய் குணத்துக்கு வரவில்லை.

மனிதருக்கு இந் நோய் கண்ட போதும் இம் மருந்தை உட்செலுத்தினால் நோய் அனேகமாகக் குணத்துக்கு வருமென்று ஊகிக்கப்படுகிறது.

மேற் கூறிய ஸீரம் டிப்தீரியா ஸீரத்தைப் போலவே உண்டாக்கப்படுகிறது. அதாவது நோய்வித்தைச் சிறிது சிறிதாக ஒரு குதிரையிலுள் செலுத்தி அக்குதிரைக்கு அந்நோய் இலேசாகக் கண்டு, அதை அகற்ற அக்குதிரை உடலிலேயே ஒரு வகை மாற்றுப்பொருள் உண்டாக்கப்பட்டு, அது இரத்தத்தோடு கலந்து, நோய் வித்தோடு போராடி அதை வென்று, குதிரை குணமடையும் போது அதின் இரத்தத்தில் சிறிது எடுத்து அதை வடிகட்டிய உதிரநீரே அந் நோயைத் தடுக்கவல்ல ஸீரமாகிறது.

இவ் வகை ஸீரம் இந் நோயைத் தீர்க்கவல்ல தென்கிறருசு நமக்கு நாளடைவில் தான் கிடைக்கும். கிடைத்ததும் சரிவர நடத்திய மனிதப் பிரயத்தனத்தால் எவ்வளவு தூரம் நன்மை விளையக் கூடுமென்பது நனகு விளங்கும்.

Casting the Horoscope

ஜாதக ஸ்புடம்

ஸ்ரீமான் S. K. பார்த்தசாரதி, B.A., B.L. எழுதியது.

இப்பத்திரிகையின் சித்திரைமாதப் பகுதியில் ஜன்னம் என்பது யாதென்றும் அதைக் குறிப்பதற்கு வேண்டிய முக்கிய அமிசங்கள் யாவை என்றும் விவரித்தெழுதியிருக்கிறேன். அவ்வமிசங்களைக் கொண்டு ஜாதகத்தை எவ்விதம் சரியாகக் கணிப்பது என்பதே இப்பகுதியில் எழுதப்படும்.

ஜாதககணனம் தற்காலத்தில் பலவிதமாக செய்யப்படுகிறது. அவற்றுள் பெரும்பான்மை வான சாஸ்திர அறிவின்மையை வெளிப்படுத்துகின்றன. மேல்நாட்டில் உள்ள கணனமுறை மிகவும் நன்றாயும் அனுவளவும் பிசகற்றும் உளது. ஆயினும் அதை இப்பொழுது இங்குளடுத்துரைக்க இயலாது. நமது தேசத்திலும் "ஸ்ரீபதிபத்ததி" என்ற புத்தகத்தில் ஜாதககணனத்தை வெகு சூட்சுமமாய் செய்யும் முறை கூறப்பட்டிருக்கிறது. ஆயினும் அதுவழங்கிவரவில்லை. அம்முறைப்படி கணனம்செய்து பார்த்திருக்கிறேன். அது வெகு கடினமாய்த்தானிருக்கிறது. இருப்பினும் எதற்காக அவ்விதம் கூறியுள்ளார் என்பதை ஆலோசித்தபோது சில வான சாஸ்திர உண்மைகளை கைக் கொள்வதற்காகவே என்பது விளங்கிற்று. மேல்நாட்டு கணனத்திலோ

அவ்வுண்மைகளை வெகு சுலபமான முறையில் ஆட்கொண்டுளார். அவைகளைப்பற்றி இங்கு வரைதல் சாத்தியமில்லை எனினும் அவற்றுள் ஒன்றை மாத்திரம் கூறிச்செல்கிறேன். நம்முள் லக்கினம் (Ascendant) என்பதை மாத்திரம் எடுத்திருக்கிறார்களே யொழிய மத்தியஸ்தானம் (Meridian) என்பதை எடுக்கவில்லை. இது முற்றும் தவறும். மத்தியஸ்தானம் கண்டுபிடிக்காமல் பாவஸ்புடம் (Bhavasputa) செய்யமுடியாது. அதனால் தான் பாவசக்கிரம் (Bhavachakra) போடுதல் நம்மவர்க்கு தற்காலம் தெரியாமலிருக்கிறது. அவ்விதம் இருப்பதினால் உண்டாகும் தீங்குகள் எண்ணில. அவற்றை அகற்றுவதற்கு வேண்டிய முயற்சிகள் செய்தே தீரவேண்டும். நமது புத்தகங்களில் கூறியுள்ள முறைகளினால் மத்தியஸ்தானம் கண்டுபிடிப்பது எளிதல்ல. மேல் நாட்டு வழியே சுலபமாயும் சரியாயும் உளது. ஆயினும் தற்காலம் அதைத் தமிழில் எழுதமுடியாமலிருக்கிறது, இப்பொது மத்தியஸ் தானகணித மின்றி செய்யும் கணனமுறைகளில் சரியானதை எடுத்துரைக்கிறேன். கும்பகோணம் மடத்து முத்திரை பெற்ற ம-ா-ா-ஸ்ரீ விசுவநாத சிரௌதிகள் பஞ்சாங்கத்தை* ஆதாரமாக வைத்து எழுதுகிறேன்.

1921-ம் ஹு ஆகஸ்டுமாதம் 17-ம் தேதிக்குச் சரியான துர்மதி ஹு ஆவணிமீ 2-ம் தேதி புதன்கிழமை ராத்திரி கடிகாரப்படி மணி 7-52 க்கு சென்னையில் (அக்ஷாம்சம் 13°; ரேகாம்சம் 80¼°) ஒரு ஆண்குழந்தை பிறந்ததாக வைத்துக் கொள்வோம். -தேச மணிப்படி ஜனனகாலம்

* தமிழ்நாட்டுப் பெரிய பஞ்சாங்கம்	விலை	0	5	0
சிறிய பிரதி ...	... ,,	0	2	6

இப் புத்தகங்களை வேண்டுவோர் திருவல்லிக்கேணி பெரியதெருவில் சிரௌதி அண்டு கோவுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

7-43 ஆகிறது. சுதேச சூர்யோதயம் அந்நாள் காலை 5-51 க்கு ஆயிற்று. ஆகையால் ஜனனம் சூர்யஉதயாதி (13 மணி 52 நிமிஷத்திற்கு) 34 கடிகை (நாழிகை) 40 விகடிகை (விநாடி) க்கு ஆயிற்று.

அந்நாள் திதி நக்ஷத்ரம் முதலியவற்றை எடுத்தெழுதுவதன்முன் பஞ்சாங்கத்தின் 7-ம் பக்கத்தில் (பெரியபஞ்சாங்கம் 23-ம் பக்கம்) கூறியுள்ள தேசாந்தர ஸம்ஸ்காரத்தைச் செய்யவேண்டும். அவ்விதம் செய்தால் அந்நாள் சிரவணம் 50-59 நாழிகை இருக்கிறது. முதல்நாள் 16-26 இருந்தது. ஆக சிரவண நக்ஷத்ர ஆத்யந்த நாழிகை 67-25.

அசுவனி முதலிய நக்ஷத்ரங்கள் 27. ஒவ்வொரு நக்ஷத்ரத்திற்கு 4 பாதங்களாக மொத்தம் 108 பாதங்கள் உள. இவை மேஷம் முதலிய 12 ராசிகளையும் ராசி ஒன்றுக்கு 9 பாதங்களாக வியாபித்திருக்கின்றன. (1-ம் படத்தைக் காண்க). நமது பஞ்சாங்கங்களில் கிரகங்களுடைய சாரம் இப்பாதங்களைக் கொண்டே கொடுக்கப்பட்டிருக்கிறது. நமது உதாரண ஜனனகாலத்தில் (துன்மதி௵ ஆவணிமீ 2-ம் தேதி 34-40 நாழிகைக்கு) கிரகங்களின் நிலை பின்வருமாறு உளது :—

கிரகம்	நக்ஷத்ரம்	பாதம்
ரவி	மகம்	1
குஜன்	பூசம்	4
புதன்	ஆயில்யம்	3
குரு	உத்திரம்	1
சுக்	புனர்பூசம்	1
சனி	உத்திரம்	2
ராகு	சித்திரை	2
கே	ரேவதி	4
சந்திரன்	சிரவணம்	3

2

ராசியும்; நக்ஷத்ரபாதங்களும், நவாம்சமும், நக்ஷத்ரமஹாதசைகளும்.

		1 2 3 4 5 6 7 8 9	10 11 12 1 2 3 4 5 6		
9 10 11 12 5 6 7 8 4	மீனம் ரேவ i ii iii iv உத்ர i ii iii iv பூரட் iv	மேஷம் அசு i ii iii iv பர i ii iii iv கிரு i	ரிஷபம் கிரு i ii iii iv ரோகி i ii iii iv மிரு i ii	மிதுனம் மிரு iii iv திரு i ii iii iv புன i ii iii	7 8 9 10 11 12 1 2 3
1 2 3 9 10 11 12 7 8	கும்பம் பூரட் i ii iii சதய i ii iii iv அவி iii iv	அசு, மக, மூல — கேது தசை 9 வருஷம் பர, பூர, பூராட — சுக்ர 20 கிரு, உத், உத்ராட — சூர்ய 6 ரோ, ஹஸ், சிர — சந்தி 10 மிரு, சித், அவிட் — குஜ 7	(120)	கடகம் புன iv பூச i ii iii iv ஆ i ii iii iv	4 5 6 7 8 9 10 11 12
5 6 1 2 3 4 10 11 12	மகரம் அவி i ii சிர i ii iii iv உத் ii iii iv	திரு, சுவா, சத — ராகு 18 புனர், விசா, பூரட் — குரு 16 பூச, அனு, உத்ரட் — சனி 19 ஆயி, கேட், ரேவ — புத 17	120	ஸிம்மம் மக i ii iii iv பூர i ii iii உத் i	1 2 3 4 5 6 7 8 9
6 5 6 7 8 1 2 3 4	தனுஸ் உத் i பூரா i ii iii iv மூலம் i ii iii iv	விருச்சிகம் கே i ii iii iv அ i ii iii iv விசா iv	துலாம் விசா i ii iii சுவா i ii iii iv சித் iii iv	கன்னி உத் ii iii iv ஹஸ் i ii iii iv சித் i ii	10 11 12 1 2 3 4 5 6
		9 10 11 12 5 6 7 8 4	1 2 3 9 10 11 12 7 8		

சந்திரன் அந்நாள் சிரவண நக்ஷத்திரத்திலிருந்தது. ஜனனம் சூர்ய உதயாதி 33-40 நாழிகைக் கிருந்தபடியால் சிரவண நக்ஷத்திரத்தில் செல்லு நாழிகை முதல்நாள் 16-26, அந்நாள் 33-40, ஆக மொத்தம் 50-6: நக்ஷத்ர ஆத்யந்தம் 67-25 நாழிகையாக நிலுவை நாழிகை 17-19. பாதம் ஒன்றிற்கு நாழிகை $16\text{-}51\frac{1}{4}$ ஆக சந்திரன் சிரவணம் மூன்றும் பாதத்தின் இறுதியில் இருக்கிறான்.

ஒவ்வொரு நக்ஷத்திரத்திற்கும் மஹா தசாநாதன் ஒவ்வொரு கிரகம் என்று கொண்டுளார். அதன் விவரம் பஞ்சாங்கம் 35-37 (பெரிய பஞ்சாங்கம் 26-28) பக்கங்களால் விளங்கும். திருவோணத்திற்கு சந்திர தசை பத்துவருஷம் திருவோண நக்ஷத்ர ஆத்யந்தம் 67-25 ஆக செல்லு 50-6 போக நிலுவை 17-19 என்று கண்டோம். ஆகையால் த்ரை ராசிக முறைப்படி. (Rule of Three) சந்திர தசை வரு 10ல் செல்லு வரு 7-5-5 போக நிலுவை வரு 2-6-25. (67-25: 10::17-19:2-6-25) ஆக ஜனனகாலத்தில் சந்திர மஹாதசை கேது புக்தி சந்திர அந்தரம் நடந்தது

ஒவ்வொரு ராசியும் பலவிதமாய் வகுக்கப்பட்டுளது. அவைகளுக்கு வர்க்கங்கள் என்றுபெயர். அவற்றுள் அதிகமாக வழக்கத்தில் உள்ளவை திரேக்காணமும் நவாம்சமும். அவற்றை விவரிப்பதன்முன் ஒவ்வொரு ராசியும் 9 நக்ஷத்திரபாதம் கொண்டதென்பதை ஞாபகப்படுத்திக்கொண்டு மேற்கண்ட 1-ம் படத்தினுதவியால் ஜனனகாலத்திய ராசி சக்கிரத்தை மேற் குறிக்கப்பட்ட கிரக நிலையினின்றும் எளிதில் வரையலாம்:—

திரேக்காணம் என்ற வர்க்கம் அல்லது பிரிவு ஒரு ராசியை மூன்று பாகமாக வகுப்பது. அவ்விதம் வகுத்தால் மூன்றுபாதங்கள் அடங்கியது ஒரு திரேக்காணம் ஆகும். முதல் பாகமாயின் அந்த ராசியே அப்பாகத்தின் உள்ராசி



படம் 2.

யாகும். இரண்டாவதானால் அதன் 5-வது ராசி அதன் உள் ராசியாகும் மூன்றாவதானால் அதன் 9-வது ராசி அதன் உள் ராசியாகும் (i-1; ii-5; iii-9).

ஒவ்வொரு ராசிக்கும் அதுவே அதன் முதல் திரேக்காண உள்ராசி யாகிறது. அதன் ஐந்தாவது ராசி அதன் இரண்டாவது திரேக்காணத்தின் உள் ராசியாகும். அதன் ஒன்பதாவது ராசி மூன்றாவது திரேக்காணத்தின் உள் ராசி யாகும். உதாரணமாக:— ரிஷபத்தின் முதல் திரேக்காண உள்ராசி ரிஷபமே (2) ரிஷபத்தின் இரண்டாவது திரேக்காணத்தின் உள்ராசி கன்னி (6) ரிஷபத்தின் மூன்றாவது திரேக்காணத்தின் உள் ராசி மகரம் (10). 3-ம் படம் காண்க. நமது உதாரண ஜனனகாலத்தில் கிரகநிலைக் கேற்ப திரேக்காண சக்கிரம் பின் வருமாறு ஆகும், 3-ம் படம் காண்க.

3 ரேவ ii iii iv — 8 2 உத் iii iv ரேவ i — 4 1 பூரட் iv உத் i ii —12	1 அசு i ii iii — 1 2 அசு iv பர i ii — 5 3 பர iii iv கிரு i — 9	1 கிரு ii iii iv — 2 2 ரோ i ii iii — 6 3 ரோ iv மிரு i ii —10	1 மிரு iii iv திரு i — 3 2 திரு ii iii iv — 7 3 புனர் i ii iii —11
3 பூரட் i ii iii — 7 2 சத ii iii iv — 3 1 அவி iii iv சத i —11	ராசியும் திரேக்காணமும்		1 புன iv பூச i ii — 4 2 பூச iii iv ஆயி i — 8 3 ஆயி ii iii iv —12
3 சிர iv அவி i ii — 6 2 சிர i ii iii — 2 1 உத் ii iii iv —10			1 மக i ii iii — 5 2 மக iv பூர i ii — 9 3 பூர iii iv உத் i — 1
3 பூரா iii iv உத் i — 5 2 மூல iv பூரா i ii — 1 1 மூல i ii iii — 9	3 கேட் ii iii iv — 4 2 அனு iii iv கே i —12 1 விசா iv அனு i ii — 8	3 விசா i ii iii — 3 2 சுவா ii iii iv —11 1 சித் iii iv சுவா i — 7	1 உத் ii iii iv — 6 2 ஹஸ் i ii iii —10 3 ஹஸ் iv சித் i ii — 2

படம் 3,

நவாம்சம் என்ற பிரிவு ஒரு ராசியை ஒன்பது பாகமாக வகுப்பது. அவ்விதம் வகுத்தால் ஒவ்வொருபாதமும் ஒவ்வொரு நவாம்சமாகும். அசுவனியின் முதல் பாதம் தொடங்கி ஒவ்வொருபாதத்திற்கும் உள்ராசி மேஷம் முதல் உள்ள ராசிகள். உதாரணம் :— அசுவனி 3-ம் பாதத்தின் உள்ராசி மிதுனம். கிருத்திகையின் 2-ம் பாதத்தின் உள்

புதன்	குரு	ராகு சந்	
சுக்ரன்	திரேக்காணச் சக்கிரம்		
			ரவி
	கேது குஜன்		சனி

படம் 4.

ராசி மகரம், மிருகசிரம் 4-ம் பாதத்தின் உள்ராசி விருச்சிகம், புனர்பூசம் 4-ம் பாதத்தின் உள்ராசி கடகம். (1-ம் படம் காண்க). ஒன்பது நக்ஷத்திரங்களுக்கு 36 பாதங்களாக 12 ராசிகளும் மும்முறை வருகின்றன. ஆகவே அசுவனி மகம் மூலம் மூன்றிற்கும் உள்ராசி ஒன்றே; அவை திரிகோண நக்ஷத்ரங்கள்; அவ்விதமே பரணி, பூரம், பூராடம்;etc.மேற்கண்ட 1-ம் படத்தினுதவியால் உதாரண ஜனன கால கிரக நிலைக்கேற்ப நவாம்ச சக்கிரம் பின்வருமாறு ஆகிறது (5-ம் படம் காண்க).

இனி ஜனன காலத்திய லக்னத்தை கவனிக்கவேண்டும் நமது பூமி ஒரு நாளுக்கு ஒரு முறை சுழன்று வருவதால் சூரிய உதயம் முதல் மறுநாள் சூரிய உதயம் வரையில் பன்னிரண்டு ராசிகளும் ஒரு முறை சுழல்வனபோல் தோன்றுகின்றன. ஒவ்வொரு ராசியும் பூமி மட்டத்தினின்றும் வெளிக்கிளம்பி மேல் செல்வதுபோல் தோன்றுகிறது. அவ்விதம் தோன்றுவதற்கு ஒவ்வொரு ராசியும் ஒரே காலம் கொள்வதில்லை. இதன் காரணம் அக்ஷாம்ச வித்தியாசம்தான்.

கேது	ரவி சுக்ரன்		சந்திரன்
புதன்	நவாம்சம்		
சனி			
குரு	குஜன்		ராகு

படம் 5.

மத்ய ரேகை யிடத்தில் அவை ஸம அளவு காலம் கொள்கின்றன. சென்னையைப்போன்ற உத்தர அக்ஷாம்ச தேசங்களில் ராசிமானம் அல்லது ஒவ்வொரு ராசியின் வெளித் தோன்றும் காலம் (Time of Oblique Ascension) வேறுபட்டது. இதைப்பற்றி சித்திரை மாதப் பகுதியின் 6-ம் பக்கத்தில் விவரித் தெழுதியிருப்பதைக் காண்க. அவ்வித ராசிமானம் பஞ்சாங்கத்தின் 6-ம் (பெரிய பஞ்சாங்கத்திலும் 6-ம்) பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கு சென்னைக்கு சிம்மத்

தின் ராசிமானம் நாழிகை 5-8 வினடி என்று காணலாம். இது நிற்க; சூரியன் ஒவ்வொரு ராசியிலும் ஒவ்வொரு மாதம் இருக்கிறான். ஸௌரமாதம் சூரிய ஸஞ்சாரத்தினல்தான் எண்ணப்படுகிறது. சூரியன் ஸிம்மராசியில் பிரவேசிப்பது முதல் அதை விட்டகல்வது வரையில் ஆவணிமாதம். எனவே ஆவணிமாதத்தில் ஒவ்வொரு தேதிக்கும் அந்த ராசியில் சூரியன் உள்ள ஸ்தானம் யாதும் என்பது சொல்லாமலே விளங்கும். சூரியன் ஸிம்மத்தில் 30 நாள் இருப்பதாக வைத்துக்கொண்டால் ஒவ்வொருநாளும் ஸிம்ம ராசியில் 30-ல் ஒரு பங்கு கழியும் என்பது புலப்படும். நமது உதாரண ஜனனத்தை எடுத்துக்கொண்டால் சூரியன் ஸிம்மராசியில் ஆடிமாதம் 31-ம் தேதி 59-11 நாழிகைக்கு பிரவேசிப்பதாகவும் ஆவணி மாதம் 31-ம் தேதி 58-58 நாழிகைக்கு அதைவிட்டகல்வதாகவும் தெரியவரும். ஆகவே ஸிம்ம மாதத்தின் அளவு 30 நாள் 59 நாழிகை 47 வினடிகள் ஆவணி மாதம் 2-ம் தேதி சூரிய உதயகாலத்தில் ஸிம்ம மாதத்தில் கழிந்தது 1 நாள் 0 நாழிகை 49 வினடிகள். ஸிம்மராசியின் ராசிமானம் 5 நாழிகை 8 வினடிகள் என்று கண்டோம். ஆகையால் ஸிம்மராசியில் அன்று சென்றுளது—

$$\frac{1\text{நாள் } 0 \text{ நாழிகை } 49 \text{ வினடி}}{30\text{நாள் } 59\text{நாழிகை } 47\text{வினடி}} \times 5\text{நாழிகை } 8\text{வினடி} = 10\text{வினடிகள்}$$

ஆக அந்நாள் சூரிய உதயத்தின் பிறகு ஸிம்மராசியில் செல்லவேண்டியது (5·8—0-10) நாழிகை 4-58 வினடிகள் நமது உதாரண ஜனனம் சூரிய உதயம் முதல் நாழிகை 34-40 க்கு ஆனதால் அக்காலத்திய லக்னம் அல்லது வெளித் தோன்றிய ராசி எது வென்று ராசிமானத்தைக் கொண்டு அறியலாம்.

ஸிம்மத்தில் நிலுவை	4-58 நாழிகை
கன்னி	5-4
துலாம்	5-16
விருச்சிகம்	5-29
தனுஸ்	5-20
மகரம்	4-45
	30-52

ஆக கும்பத்தில் செல்லு (34-40—30-52) நாழிகை 3-48. கும்பத்தின் ராசிமானம் 4-16. கும்பராசியின் நவாம்ச அளவு ($\frac{4\cdot16}{9}$) 0-28$\frac{4}{9}$; திரேக்காண அளவு 1-25$\frac{1}{3}$. ஆகவே லக்னம் கும்பராசியின் 8-வது பாகத்தின் இறுதி. அதாவது லக்னம் கும்பராசி துலாம் திரேக்காணம் ரிஷப நவாம்சம் ஆகும். இதை மேற்கூறிய சக்கிரங்களில் ஆங்காங்கு குறித்துக் கொள்ள வேண்டும் (6-ம் படம் காண்க).

முடிவாக நமது உதாரண ஜாதகம் பின் வருமாறு குறிக்கப்பட வேண்டும் :—

ஓம்

சுபமஸ்து.

1921-ம்௵ ஆகஸ்டுமாதம் 17-ம் தேதிக்குச் சரியான துர்மதி௵ ஆவணிமாதம் 2-ம் தேதி புதன்கிழமை சதுர்த்தி 31 27, சிரவணம் 50-59, இந்த சுபதினத்தில் சென்னை (உத்தர அக்ஷாம்சம் 13 பாகை குணக ரேகாம்சம் 80 பாகை 15 கலை) யில், இந்தியா ஸ்டாண்டர்ட் மணி ராத்திரி 7-52, சுதேச மணி ராத்திரி 7-43-க்குச் சரியான அந்நாள் சுதேச சூர்ய உதயாதி நாழிகை 34-40 க்கு ஆண்குழந்தை சுப ஜனனம். திருவோண நக்ஷத்ரம் ஆத்யந்தம் 67-25 ஆக அதில் செல்லுபோக நிலுவை 17-18 க்கு சந்திர தசையில் செல்லுபோக நிலுவை௵ 2 மீ 6 நாள் 25, ஆக ஜனன காலத்தில் சந்திரதசை கேது புக்தி சந்திர அந்தரம்.

கேது			சுக்
ல	ராசி		குஜன் புதன்
சந்			ரவி குரு
			சனி ராகு

புதன்	குரு	ராகு சந்	
சுக்ரன்	திரேக்காணம்		
			ரவி
	கேது குஜன்	ல	சனி

கேது	ரவி சுக்	ல	சந்
புதன்	நவாம்சம்		
சனி			
குரு	குஜன்		ராகு

படம் 6.

மேற்கூறியபடி ஜாதகத்தைக் கணித்து குறித்துக் வைத்துக் கொண்டால் பலன் சொல்வதற்கு எளிதாகும்.

மதிப்புரை
Review

குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகை நாடி மிக்க கொளல்.—குறள்

கற்பின் வெற்றி அல்லது விக்ரமசிங்கன் கோட்டை மர்மம்—(ஸ்ரீமான் பி.எஸ். சுப்பிரமணியம் M.A. அவர்களால் எழுதப்பட்டு, மயிலாப்பூர் அல்லயன்ஸ் கம்பெனியாரால் வெளியிடப்பட்டது. விலை ரூ. 1.)

இனிய நடையில் எழுதப்பட்ட இத் துப்பறிகதை படிக்க நன்றாயிருக்கிறது.

கரும்பலகைச் சித்திரம் (Blackboard Drawing and Chalk Drill - திருவிடை மருதூர், பள்ளிப் போதகராயிருக்கும் டி. ஆராவமுத ஐயங்கார் இயற்றியது. மூன்று பகுதிகளாக உள்ளது. விலை முதற்பகுதி அணா 2, இரண்டாம் பகுதி அணா $2\frac{1}{2}$, மூன்றாம் பகுதி அணா 3.)

நமது நாட்டிலுள்ள ஆண் பெண் அனைவரும் எழுதவும் படிக்கவும் கற்றுக்கொள்வது போலவே சங்கீதத்திலும் சித்திரத்திலும் சிறிது பயிற்சி பெற்றிருக்கவேண்டு மென்பது எமது கொள்கை. நாம் காலாகாலத்தில் சரியான முறைப்படி இவற்றைக் கற்க ஆரம்பித்தால் எளிதில் இவற்றில் சிறிது தேர்ச்சி பெறலாம். ஸ்ரீமான் ஐயங்காரவர்கள் சிறுவர் சிறுமியர் எளிதில் சித்திரம் வரையக் கற்றுக்கொள்ளுமாறு படிப்படியான அப்பியாச முறைகளை ஏற்படுத்தியிருக்கின்றனர். இப்புத்தகங்கள் மிகவும் நன்றாயிருக்கின்றன.

கதாரஸ மஞ்சரி (முடிகொண்டான் பண்டிதர் எம். எம். நாராயணஸ்வாமி ஐயர் அவர்களும் ஸ்ரீமான் எஸ். எக்ஸ்ஸ்வாமி அவர்களுமாக எழுதியது. இந்தியா அச்சுக் கூடத்தில் அச்சிட்டது. விலை அணா 4.

இப்பெயர் கொண்ட எழுகதைத் தொகுதி யொன்றைச் சிறிது காலத்துக்கு முன் வரப்பெற்றோம். சிறுவர் சிறுமியருக்குப் புத்திமதி புகட்டுவதற்கு உரிய சாதகங்கள் கதைகளே. நமது புராணங்களின் றெடுத்துத் தொகுக்கப்பட்டிருக்கும் இக் கதைகள் நமது பள்ளிக்கூடங்களில் கீழ்வகுப்புக்களில் படிக்கும் மாணவர்க் கென்றே எழுதப்பட்டுள்ளன. அவர்க்கு நீதி நெறிகளைப் போதிக்கும் நோக்கம் கொண்டன.

புதிய கவிகள்
New Poems

1. வெண்பாப் பதிகம்.

['முத்துராமலிங்க சேதுபதி', 'ராசராசேசுர சேதுபதி' என்னும் பெயர்கள் பூண்ட கனம் இராமநாதபுரம் ராஜா அவர்கள், கவிபுனையும் வன்மை சிறிதுள்ள இவ் ஆக்கியோனை ஒருநாள் சந்தித்த விடத்து, அவனது கவித்திறனைப் பற்றி ஸரஸமொழிகள் சில கூற, அது காரணமாக இப் பதிகம் பாடப்பெற்றது. இவ்வெண்பாக்களின் முதலெழுத்துக்களை மேல் கீழாகவும், கடை யெழுத்துக்களைக் கீழ்மேலாகவும் முறையே தொடுத்து வாசிக்க, அக்கனவானின் முதற் பெயர் துலங்கும்.]

1) முத்தால், அடகுண் பரத்தியர், தம் முன்றில் மீன்
தொத்துபுள் ஓச்சும் குளிர்நாட !— ஸத்வ
அறன்ஓம்பும் ஆண்மையின் ஆக்குங்கோல் சீர்த்தி
மறன்ஓங்கு வைவேல் ? மதி.

(2) துன்னுதுகிர்க் கூடு, பல தீவுகளாத் தோன்றி, மிகு
பொன்னை விளைக்கும் புனல்நாட !— உன்னி
மலைதரும்பாக், தாளாற்று மக்கட்கா காதென் ?
பலதுளிபேர் வெள்ளமென் ப.

(3) ராமர் துணைநாடி ராப்பகலாத் தாணடந்த
காமர் திருநாட்டுக் காவலனே !— ஏமப்
புணையாவ திந்தப் பவப்புணரிக் கின்பத்
துணையாவான் மாண்பென் றோதி.

---

* இத்தலைப்பின்கீழ் வருவன, பழைய வழக்கு அபிப்பிராயங்களுடன் புதிய கருத்துக்களையும் முறைகளையும் தழுவி நிகழ்தலால், 'புதியன புகுத்தலை'க் கைக்கொண்ட நமது பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்; பத்திரிகையைப் படிக்கும் பலர், பலவேறு காரணங்களால் இவற்றையும் படித்துக், குற்றங் குணங்களைக் குறிக்கொள்வரென நம்புகிறோம். [த. நே. பத்திராதிபர்]

(4) மணலும் களரும் மணிநெல் வயலும்
இணையுள் மயங்கச் செழிக்கும்—பனைநாட!
இன்பெரியத், துன்பினிக்க, வன்பசியில் ஏற்றசுவைத்
தின்பெறியச் செய்வது நெஞ்சே.

(5) லிங்கம் தொழுது,ரகு நாதன் உயிர்கொன்ற
பங்கம் கழுவு பதி அரசே!— துங்கக்
கலையால் மதிமுதிரக் கற்றோர், ஒழுகார்
உலகார் உளம்புழுங்க.

(6) கற்பகமே எல்லாம் காலம் கணக்கின்றித்
தற்பவமாத் தோன்றும் தனிநாட!—அற்ப
நிதியுமில ரேனும் நீ நிந்தியேல், நீண்ட
மதியுளரேல் அஃதே வலி.

(7) சேற்றப்பூ வீற்றிருப்பாள் செல்வி; உயர்கைதை
ஏற்றபூப் பிதகற்கும் ஏலாதே—தோற்றம்,
உறவென்னும்? தத்தம் வினைதருவ தொட்பம்;
மறவர் குலப்பெரும!

(8) துங்கவட கங்கைநதி மூழ்கினரும் பங்கமறத்
தென்கடலை நேடிவரு சேதுபதீ!—தங்கும்
கரையில் கரைபசப்பாக் காண்பார்க்குச் சாகும்
வரை நிறைவு தேர்ச்சி வரா.

(9) பதநீர், மயக்கும் படுநீர், இரண்டும்
இதமா யிறக்க அருள் பெண்ணை—முதல் நாட!
மேன்மையும் கீழ்மையும் நம்வினையே; சிட்டியில் அப்
பான்மையிலை உண்மையறி பார்த்து.

(10) தித்திக்கும் செந்தமிழ்த்தேர் செல்வா! சுயநலமே
நத்தித்தம் நாட்டை நலிவாரைப்—புத்து
நரகமும் வேண்டா, நலிபறிநோய் தீண்டா,
உரகமும்; அஞ்சும் உருமு.

குறிப்புரை :—இவ் வெண்பாக்களில் 7-வது 10-வது தவிர எஞ்சியவை, முதலிரண்டு அடிகளால் இராமநாதபுரம் ஜமீனின் வளத்தையும் பெருமையையும் வருணித்து, ஸம்போதனத்தால் பாட்டுடைத்தலைவனை முன்னிலையாக்கி; பிற அடிகளால், ராஜ தருமத்துக்கடுத்த யாதானும் பெரியதோர் உண்மையைக் கூறுகின்றன. ஏழாவது பாவில் கடையடியிலும், பத்தாவதில் முதலடியிலும் ஸம்போதனம் அமைந்திருக்கின்றது.

(1) பரத்தியர், அடகுண்ணும் வாயால் புள்ளோட்ட மாட்டாது முத்தை எறிந்தோட்டுவது, முத்தின் மலிவை விளக்கும். அலங்காரப் பொருளாம் முத்தினும் உணவுப் பொருளாம் மீனே இன்றியமையாதது. மறவீரமும் யுத்தத் திறனுமே அரசனது முக்கிய குணங்களாக மதிக்கப்பட்டு வந்த காலம்போய், ஸத்துவகுணமே அரசனுக்கும் சிறந்ததாக எண்ணப்படும் இந்நாளுக்கேற்ப மறனினும் அறனே பெரும்புகழ் படைக்குமென்று கூறினர். அடகு=இலைக்கறி; முன்றில்=முற்றம்; சீர்த்தி=பெரும்புகழ்; வைவேல்=கூரிய வேல்; மதி=ஏவல்வினை.

(2) Coral reefs என்னும் நுண்ணிய பவளக்கூட்டுச் சேர்க்கையால் அமைந்து பல்வளம் தரும் தீவுகள் பல, இராமநாதபுரம் ஸமஸ்தானத்துக்குள பலதுளியே பெரு வெள்ளமாதலின், மலைபோல் வரும் தடையைத் துரும்பாய் நினைத்து, ஊக்கத்தோடு முயல்வார்க்குக் கைகூடா வினை இல்லை யென்றார். ஊழால் ஆகாததும் முயற்சியாலாகும் என்றார் காயனார். நுண்ணிய துகிர்க்கூடுகளே பெருந்தீவுகள் ஆகின்றமை நோக்குக. துன்னுதல்=நெருங்குதல் ; துகிர்=பவளம் ; தாள்=முயற்சி ; ஆற்றுதல்=வினைசெய்தல்.

(3) இல்லறத்தி விருப்பவன், பிறவிக்கடலை நன்கு கடக்க, மனையாட்டியின் மாட்சிமையே சிறந்த புணை என்றார்; அதனாலன்றோ இராமர் தம் துணைவியை நாடி வழி நடந்தது. திருக்குறளில் வாழ்க்கைத் துணை நலப்பதினையும் "கூறாமற் சந்யாசம் கொள்" என்னும் முடிவுடை வெண்பாவையும் பார்க்க. தனை = மனைவி; காமர் = அழகிய; ஏமம் = க்ஷேமம்; பவப்புணரி = பிறவிக்கடல்.

(4) இச் செய்யுளில், இன்பமய மானதை எரிப்பாக வும், துன்பமய மானதை இனிப்பாகவும், கடும்பசியில் உருசி யுள்ள உணவை வெறுத்துத் தள்ளவும் செய்யவல்ல மனத் தினது மாயவலியைக் கூறினார்; முன்னீரடித்திணை மயக்கம் பின்னீரடி மனமயக்கத்தைக் குறிக்கலாயிற்று. "இன்ப மும் துன்பம் தானும் இதயத்தோடியைந்த வன்றே" என் றார் கம்பரும். பனை = பண்ணை;

(5) "உலகத்தோடொட்ட ஒழுகலின்" சிறப்பு, இங் குரைக்கப்பட்டது. கசடறக் கற்றவர் அதற்குத்தக நிற்க வேண்டுவதும், மனத்துக்கண் மாசிலா ஒழுக்கமே அனைத்தறனு வதும் ஒருபுறம் நிற்ப, தன்னலத்தினும் பரோபகாரமே சிறந்ததாதலின், கற்றோர் உலகம் வருந்த ஒழுகார் என்றார். தன் மனைவியை அபகரித்த இராக்கதரையே கொன்ற இரா மன், உயிர்க்கொலை பாவம் என்பதை நிலைநிறுத்திக் கழுவாய் இயற்றினன்றே. துங்க = பரிசுத்தமான; கலை = சாஸ்திரங் கள்; மதி = புத்தி—அறிவு.

(6) நிதியினும் மதியே பெரிதென்றுரைப்பதிது. தாலம் = பனை மரம்; அதனைக் கலியுக கற்பவிருக்ஷமென்று கூறுவதுண்டு. தற்பவமா = தானாகவே—பிறர் வித்திப் பயிர் செய்தலின்றி.

(7) ஒருவன் பிறந்த சாதியினும் சுற்றத்தினும் அவன் செய்யும் கருமமே அவன் ஒழுக்கமே முக்கியம் என்பதிது. சேற்றில் பிறந்த தாமரையின் செம்மை நோக்கி இலக்குமி அதில் வீற்றிருக்க, தாழைக்கொம்பரின் உச்சியில் விளங்கு தாழம்பூ (ஒருகாலத்தில் பொய் பேசியதனால்) பித்தனாகிய சிவனுக்கும் ஆகாமற் போயிற்றன்றே. ஐசுவரிய லக்ஷ்மி ஒன்றை ஏற்க, பித்தனாகிய ஆண்டியும் மற்றதை வெறுத்து விலக்கினன் என்றார். சேற்றபூ=பங்கயம்; செல்வி= லக்ஷ்மி; கைதை=தாழை; பித்தன்=சிவன்; தோற்றம்= பிறப்பு; ஒட்பம்=குணமேன்மை; பெரும=பெரியோய்.

(8) காசி சென்று தூயகங்கை யாடினர்; இராமேசுரஞ் சென்று உவர்க்கடலாடும் உலக வழக்கத்தையும்; தான்மே யும் இக்கரையினும் பிறபசுக்கள் மேயும் அக்கரையைப் பசும் புல் உடைத்தாய்க்கருதி அவாவும் பசுப்போன்ற மனிதருக்கு, மனநிறைவும் தெளிவும் ஒருநாளும் வரா என்பதையும் கூறுவ திது. முற்பகுதிக்கும் பிற்பகுதிக்குமுள்ள பொருத்தம் சொல்லாமே விளங்கும். நேடி=தேடி;

(9) சிருஷ்டி அமைப்பில் மேன்மை கீழ்மை வித்தியாச மில்லை; நாம் செய்வினையான் ஏற்படுபவே அவை, என்பதை விளக்குவதிது. பனைமரம், உடலை வளர்க்கும் பதனீரையும் மதியை மயக்கும் கள்ளையும் ஒருங்கே உதவாநிற்கும்; ஒன்றைவிட்டு மற்றதைப் பருகுவோர் வினையானன்றோ நன்மையும் தீமையும் விளைவது. படு=கள்; பெண்ணை= பனைமரம்; சிட்டி=சிருஷ்டி; பான்மை=தன்மை.

(10) தன்னயமே கருதி நாட்டை வருந்தச் செய்து தீங்கிழைக்கும் துரோகிகளைப் பழிப்பதிது, பாதகச் செயல்

ஒன்றைச் செய்வானைப் பார்ப்பவர், மனம் பொறாது, "இவன் நரகில் புகானா! இவனைக் கொள்ளைநோய் கொண்டுபோகாதா பாம்பு தீண்டாதா! இவன் தலையில் இடி விழாதா!" என்று பதைபதைத் துரைப்பது உலகவழக்கு. மகா பாதகனான தேசத்துரோகியை, நரகம், நோய், பாம்பு, இடி முதலியனவும் தொட அஞ்சும் என்று இழித்துரைப்பதிது. யாவரும் அஞ்சும் சர்ப்பமும் இடிக்குப் பயமுறல்போல, யாவரும் அஞ்சும் நரகங்களும் நோய்களும் நாட்டுத்துரோகியை அஞ்சுமென்பது தொனிப்பொருள். நத்தி=விரும்பி; நலிதல்=வருத்துதல்—கெடுத்தல்; புத்து=நரகங்களிலொன்று; நலிநோய்= க்ஷயம், குஷ்டம் முதலியன; பழிநோய்=வாந்தி, பேதி, கொள்ளை நோய் முதலியன; உரகம்=பாம்பு; உருமு=இடி.

அ. மா.

நமது நியாயஸ்தலங்கள்

Our Law Courts

ஸ்ரீமான் N. ராஜகோபாலாசாரியார், B.A., B.L. எழுதியது.

சென்ற சித்திரை மாதத்தில் இந்தப் பத்திரிகையில் 30-வது பக்கத்தில், இந்தியாவில் ஏற்படுத்தப் பட்டிருக்கும் நியாயஸ்தலங்களைப் பற்றியும், சட்ட சபைகளைப் பற்றியும், வெகு சுருக்கமாக எழுதினோம். இப்பொழுது அந்த நியாய ஸ்தலங்களைப் பற்றிக் கொஞ்சம் விவரித்துச் சொல்லுவோம்.

இந்த நியாயஸ்தலங்கள் மூன்று விதமானவை என்று முன்னமே சொன்னோம். அவற்றுள் முதலாவதாகிய ஸிவில் (Civil) நியாயஸ்தலங்களைப் பற்றி முதலில் சொல்லுவோம். இந்த ஸிவில் நியாயஸ்தலங்களை ஆங்கிலேய துரைத்தனத்தார் இந்தியாவில் ஏற்படுத்தியிருக்கும் விதம் எப்படி என்றால்: இந்தியாவை, பங்காளம், மதராஸ், பம்பாய், அலகாபாத், பஞ்சாப், பாட்னா, பர்மா, என்று அனேக மாகாணங்களாக பிரித்தும்; ஒவ்வொரு மாகாணத்தையும் அநேக ஜில்லாக்க ளாகப் பிரித்தும்; ஒவ்வொரு ஜில்லாவையும் அநேக தாலூக் காக்களாகப் பிரித்தும், ஒவ்வொரு தாலூக்காவையும் அநேக கிராமங்களாகப் பிரித்தும் இருக்கிறார்கள். துரைத்தனத்தார் ஒவ்வொரு மாகாணத்தின் முக்கிய பட்டணத்தில் ஹை கோர்ட்டு (High Court) என்று வழங்கும் ஒரு பெரிய நியாயஸ்தலத்தையும், ஒவ்வொரு ஜில்லாவின் முக்கிய பட்ட

ணத்தில் ஜில்லாகோர்ட்டு(District Court) என்று வழங்கும் நியாயஸ்தலத்தையும், அம்மாதிரியாகவே தாலூக்காக்களில் ஸப்கோர்ட்டு (Sub-Court) என்று வழங்கும் நியாயஸ்தலங்களையும், முன்சிப் கோர்ட்டு (Munsiff's Court) என்று வழங்கும் நியாயஸ்தலங்களையும், ஒவ்வொரு கிராமத்திலும் கிராம முன்சிப் (Village Munsiff's) கோர்ட்டையும் ஏற்படுத்தி யிருக்கிறார்கள்.

இவ்விதமான நியாயஸ்தலங்களில் மிகவும் கடைசியான கிராம முனிசிப்கோர்ட்டைப் பற்றி முதலில் (Village Munsiff's Court) சொல்லுவோம். இந்த நியாயஸ்தலத்துக்கு, கிராமத்துக்கு அதிகாரியாகிய கிராம முனிசிப் என்பவர்தான் நியாயாதிபதி. இவருக்குத் தன் கிராமத்துக் குள்ளிருக்கும் ஜனங்களுக்குள் ஏற்படும் விவகாரங்களில் 20 ரூபாய் வரையில் பெறுமான விவகாரங்களை விசாரிக்க மட்டும் சாதாரணமாய் அதிகாரம் உண்டு. அப்படி அவர் செய்யும் தீர்ப்புக்களிலிருந்து பெரிய கோர்ட்டுக்களுக்குச் சாதாரணமாக அப்பீல் கிடையாது. ஆனால் இந்த கோர்ட்டார் அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய விவகாரங்களை இந்த கோர்ட்டிலேதான் கொண்டு வரவேண்டுமென்ற கட்டாயம் இல்லை. இந்த கோர்ட்டுக்கு அருகாமையிலிருக்கும் ஸ்மால் காஸ் கோர்ட்டுகளில (Small-Cause Courts) அவைகளைக் கொண்டு வரலாம்.

இதற்கு அடுத்த மேலான முனிசிப்கோர்ட்டு (Munsiff's Court) என்று வழங்கும் நியாயஸ்தலங்களில அந்தந்த முனிசிப் அதிகாரிக்கு அதிகார எல்லையாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஒன்று அல்லது இரண்டு தாலூக்காவில் ஏற்படும் விவகாரங்களில் சில விவகாரங்களை மட்டும் விசாரிக்க அதிகாரம் உண்டு. அதாவது ரொக்கத் தொகைகளை எதி

ராளிகளிடமிருந்து வசூலிக்க, ஏற்படும் விவகாரங்களில் 3000 ரூபாய்க்குமேல் பெறுமானமில்லாத விவகாரங்களை யும், நிலங்களைப் பற்றிய விவகாரங்களாக இருந்தால், சுமார் 15,000 ரூபாய்க்குமேல் விலையில்லாத நிலங்களைப் பற்றி யும் உள்ள விவகாரங்களையும் முன்சீப் கோர்ட்டார் அவர்கள் விசாரிக்கிறார்கள். இவ்விதமாய் முன்சீப் கோர்ட் டார் அவர்களுக்குத் செய்யும் தீர்மானங்களிலிருந்து அந்தந்த ஜில்லாக்களிலிருக்கும் ஜில்லாக்கோர்ட்டுக்களுக்கு அப்பீல் செய்யலாம். அவ்விதமான அப்பீல்களை ஜில்லாக்கோர்ட் டார் அவர்கள், தாங்களே விசாரித்து முடிவு செய்ய அதிகா ரம் உண்டு. அல்லது, அந்த அப்பீல்களை ஜில்லாக்கோர்ட்டார் அவர்கள் தங்களுக்குக் கீழ்ப்பட்டிருக்கும், ஸப்கோர்ட்டுகள் (Sub-Court) என்று வழங்கும் நியாயஸ்தலங்களுக்கு அனுப் பிமுடிவு செய்யச் சொல்ல அதிகாரம் உண்டு. இவ்வாறு இந்த இரண்டுவகைக் கோர்ட்டார் அவர்களும், அப்பீல்களில் செய்யும் தீர்மானங்களில் சட்டத்தவறுதல்கள் இருந்தால், அத்தீர்மானங்களிலிருந்து, ஹைகோர்ட்டு என்று முன் சொ ல்லியிருக்கும் நியாயஸ்தலத்திற்கு அப்பீல் செய்யக் கக்ஷிக் காரர்களுக்கு அதிகாரம் உண்டு.

இதற்கு முன் சொல்லிய, ஸப்கோர்ட்டு (Sub-Court) என்று வழங்கும் நியாயஸ்தலங்களுக்குச் சுமார் ஒவ்வொரு ஜில்லாவிலும் மூன்று நான்கு தாலுக்காக்களிலுள்ள விவகா ரங்களை விசாரிக்க அதிகாரம் துரைத்தனத்தார் கொடுத்தி ருக்கிறார்கள். ஜில்லா கோர்ட்டார் அவர்களுக்கு அந்த அந்த ஜில்லா முழுவதிலுமுள்ள விவகாரங்களை விசாரிக்க அதிகா ரம் உண்டு. மேற் சொல்லிய ஸப்கோர்ட்டார் அவர்களும் ஜில்லா கோர்ட்டார் அவர்களும் தங்கள் தங்கள் அதிகார எல்லைக்குள் எவ்விதமான பெரிய விவகாரங்களையும் விசாரிக்க லாம்.

இப்படி ஸப்கோர்ட்டார் அவர்களும் ஜில்லா கோர்ட்டார் அவர்களும் அனேகமாய் சமான அதிகாரம் உள்ளவர்களாக இருந்த போதிலும் சிற் சில விஷயங்களை விசாரித்து முடிவு செய்ய ஜில்லா கோர்ட்டாரவர்களுக்கு மட்டுமே அதிகாரம் உண்டு. அதற்கு உதாரணமாகச் சிலவற்றைச் சொல்லுவோம். தகுந்த வயது வராமலிருக்கிற மைனர்கள் (Minors) என்று வழங்கப்படும் சிறுவர்கள், சிறுமிகள் இவர்களுக்குப் போஷகர்கள் ஏற்படுத்தவும் அவர்களுடைய சொத்துக்களைக் காப்பாற்றுவதற்கு தகுந்த மனுஷ்யர்களை காப்போர்களாக ஏற்படுத்தவும், அவர்களுக்கு 21 வயது முடிந்தவுடன் அவர்களுடைய சொத்துக்களை அவர்களுக்குத் திருப்பி ஒப்பிவிக்கச் செய்யவும் உள்ள அதிகாரம் ஜில்லாக் கோர்ட்டார் அவர்களுக்கு மட்டுமே உண்டு. அம்மாதிரியாகவே ஜனங்கள் தங்கள் சொத்துக்களுக்கு உயில் (Will) என்னும் மரண சாசனம் ஏற்படுத்தி விட்டு இறந்து போனால் அந்த உயில்கள் நிஜமான வைகளா அல்லது பொய்யானவைகளா என்று தீர்மானிக்க ஜில்லாக் கோர்ட்டார் அவர்களுக்குக் மட்டுமே அதிகாரம் உண்டு.

இம்மாதிரியாக ஸப்கோர்ட்டார் அவர்களும் ஜில்லாக் கோர்ட்டார் அவர்களும் அசல் விவகாரங்களில் செய்யும் தீர்ப்புக்களிலிருந்து ஹைக்கோர்ட்டு என்னும் நியாயஸ்தலத்துக்கு அப்பீல் செய்ய அதிகாரம் உண்டு.

ஒவ்வொரு ராஜதானியின் தலைமைப் பட்டணத்திலும் ஏற்படுத்தப்பட்டு இருக்கும் ஹைக்கோர்ட்டு என்னும் நியாயஸ்தலத்துக்கு அந்தந்த ராஜதானியின் கீழ்க் கோர்ட்டார் அவர்கள் செய்யும் தீர்மானங்களை ஆராய்ந்து பார்த்து மாற்றவும் உறுதி செய்யவும் அதிகாரம் உண்டு. இது தவிர

கல்கத்தா, மதராஸ், பம்பாய் என்ற மூன்று பட்டணங்களிலும் ஏற்பட்டிருக்கும் ஹைகோர்ட்டு என்கிற நியாயஸ்தலங்களுக்கு, அந்தந்தப் பட்டணங்களில் ஏற்படும் எவ்விதமான அஸல் விவகாரங்களையும், அந்தந்தப் பட்டணத்துக்கு அருகாமையில் ஸமுத்திரத்தில் ஏற்படும் கப்பல் நஷ்டவிவகாரங்களையும் விசாரித்துத் தீர்மானம் செய்ய அதிகாரம் உண்டு. மேற் சொல்லிய மூன்று ஹைக்கோர்ட்டுகளிலும் ஏற்படும் அஸல் விவகாரங்களை ஒரு நியாயாதிபதியானவர் தீர்மானம் செய்தால், அத்தீர்ப்பின் பேரில் ஹைக்கோர்ட்டிலிருக்கும் மற்ற நியாயாதிபதிகளிடம் அப்பீல் செய்ய அதிகாரம் உண்டு.

மேற் சொல்லிய விதமாய் ஒவ்வொரு ராஜதானியிலுமுள்ள ஹைக்கோர்ட்டார் அவர்கள் செய்யும் அப்பீல் தீர்ப்புக்களில் ரூபாய் 10,000 த்துக்குக்குறையமால் உள்ளவிவகாரங்களில் சிலவற்றை இங்கிலாந்திலிருக்கும் பிரிவீ கௌன்ஸில் (Privy Council) என்று சொல்லப்படும் ராஜ நியாயஸ்தலத்தில் அப்பீல் செய்ய அதிகாரம் உண்டு. அப்படி வரும் அப்பீல்களை மாற்றவோ உறுதிப்படுத்தவோ மேற் சொல்லிய பிரிவீ கௌன்ஸிலுக்கு அதிகாரம் உண்டு.

இப்படி மேற் சொல்லிய நியாயஸ்தலங்கள் தவிர, ஸ்மால் காஸ் கோர்ட்டுகள் (Small Cause Courts) என்று வழங்கும் சில நியாயஸ்தலங்களை துரைத்தனத்தார், ராஜதானிகளின் முக்கியபட்டணங்களிலும ஒவ்வொரு ஜில்லாவில் அநேக இடங்களிலும், ஏற்படுத்தி இருக்கிறார்கள். இந்த நியாயஸ்தலங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் அதிகாரிகளின் யோக்கியதைக்குத் தக்கபடியாக விவகாரங்களின் பெறுமான எல்லைகளை ஏற்படுத்தி இருக்கிறார்கள். இந்த நியாயஸ்தலங்களுக்கெல்லாம் அநேகமாய் ரொக்கவிவகாரங்களை

யே தீர்மானிக்க அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி அவர்கள் செய்யும் தீர்ப்புக்களில் சட்டத்தவறுதல்கள் ஏதாவது இருந்தால் அவைகளை மட்டும் மேல் விசாரணை செய்ய ஹைகோர்ட்டார் அவர்களுக்கு அதிகாரம் உண்டு. மற்றக் கோர்ட்டார்களுக்கு அதிகாரம் இல்லை.

மேற் சொல்லிய விதமாகக் கக்ஷிக்காரர்களுக்கு அஸல் நியாயஸ் தலங்களிலோ, அப்பீல் நியாயஸ்தலங்களிலோ கிடைக்கும் தீர்ப்புக்களைத் தங்கள தங்கள் அஸல் நியாயஸ்தலங்கள் மூலமாய் நிறைவேற்றித் தாங்கள் செய்த விவகாரங்களின் பலன்களை அனுபவிக்க அதிகாரம் உண்டு.

இவ்வாறு நியாயஸ்தலங்களின் அதிகார எல்லையைப் பற்றிச் சொல்லிய பின் விவகாரங்களை எந்த நியாயஸ்தலங்களில் கொண்டு வரவேண்டியது என்பதையும் விவகாரங்களை எப்படி நடத்த வேண்டியது என்பதைப்பற்றியும் இங்கு சுருக்கமாய்ச் சொல்வோம். அசையாப் பொருள்களைப்பற்றிய விவகாரங்களை அப்பொருள்கள் எந்த கோர்ட்டார் அதிகார எல்லைக்குள் இருக்கின்றனவோ அந்தக்கோர்ட்டில் தான் கொண்டு வரவேண்டும். மற்ற விவகாரங்களைச் சாதாரணமாய் வியாஜ்ஜியமூலமாவது பிரதிவாதி இருக்கும் இடமாவது எந்தகோர்ட்டின் அதிகார எல்லைக்குள் ஏற்படுகிறதோ அந்தக்கோர்ட்டில் கொண்டுவரலாம். ஆனால் நாம் முன் சொல்லியபடி இன்ன கோர்ட்டாருக்கு இன்ன தொகை பெறுமானம் உள்ள வியாஜ்ஜியங்களைத்தான் ஏற்றுக் கொள்ள அதிகாரம் உண்டு என்பது சட்டத்தில் ஏற்பட்டு இருக்கிறது. நாம் போடும் வியாஜ்ஜியங்களை அப்படிக்குப் பெறுமான எல்லையைப் பொறுத்து ஏற்றுக் கொள்ளக் கூடிய கோர்ட்டுகளுள் கடைசியான கோர்ட்டில் தான் போடவேண்டும்.

வியாஜ்ஜியம் கொண்டுவருகிறவனை வாதி என்றும் அவனுக்கு எதிராளியை பிரதிவாதி என்றும் சொல்லுவார்கள். தங்கள் தங்கள் வியாஜ்ஜியங்களை கக்ஷிக்காரர்கள் தாங்களே கோர்ட்டுகளில் நடத்திக்கொள்ளலாமானாலும் அப்படி நடத்திக் கொள்ளத் தெரியாதவர்களின் வியாஜ்ஜியங்களை நடத்திக் கொடுக்க சட்ட திட்டங்களை நன்றாகப் படித்து துரைத்தனத்தாரால் ஏற்படுத்தப் பட்டிருக்கும் பரீக்ஷைகளில் தேறி ஹைகோர்ட்டார் அவர்களால் வியாஜ்ஜியங்களை ஸரியாக நடத்தக் கூடியவர்களென்று அங்கீகரிக்கப் பட்டிருக்கும் வக்கீல்களின் மூலமாகக் கக்ஷிக்காரர்கள் நடத்திக்கொள்ளலாம். வாதியின் குறைகளைக் காட்டும் பத்திரிகைக்கு பிராது என்றும் அதற்கு அவன் எதிராளி சொல்லும் ஆக்ஷேபணைக்கு விவரப் பத்திரிகை என்றும் பெயர். பிராதையும் விவரப்பத்திரிகையையும் நன்றாகப் பார்த்தும் இருகக்ஷிக்காரர்களை நேரில் கேட்டும் நியாயாதிபதிகள் இவர்களுக்குள் உள்ள விவாத விஷயங்கள் இன்னதென்று தெரிந்து கொள்ளுகிறார்கள். அதன் பிறகு அவரவர்கள் தங்கள் தங்கள் கக்ஷிகளை சாக்ஷிகள் மூலமாயும் தஸ்தாவேஜிகள் மூலமாயும் ருஜுப்படுத்துகிறார்கள். இப்படி ருஜுப்படுத்தின பிறகு இருகக்ஷிக்காரர்களின் வக்கீல்கள் தங்கள் தங்கள் பலாபலங்களை சட்டங்களுக்கு ஒத்தபடி எடுத்துச்சொல்வதையும் கேட்டு பிறகு கோர்ட்டார் அவர்கள் சட்டங்களைப் பார்த்து தீர்ப்புச் சொல்லுகிறார்கள். அப்படிச் சொல்லும் தீர்ப்புக்களில் பிசகுகள் இருந்தால் அதுகளை கக்ஷிக்காரர்கள் சுருக்கமாக ஒரு பத்திரிகையில் எழுதி அப்பீல் கோர்ட்டாருக்கு மனு செய்து கொள்ளலாம். அந்த அப்பீல் மனுவின்பேரில் இருகக்ஷிக்காரர்களுக்கும் உள்ள வாதங்களை கேட்ட பிறகு அப்பீல் கோர்ட்டார் அவர்கள் தீர்ப்புச் சொல்லுவார்கள். இம்மாதிரியே மேல் மேலும் இருக்கும் அப்பீல் கோர்ட்டார்கள் நடவடிக்கை நடத்துகிறார்கள்.

(தொடரும்).